CC. 624/2025

13 .07.2026

PW – 1, சசி, த/பெ.சம்பத், வயது–28

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 01.15 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 01.24 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 13.07.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை:–

நீங்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வருகிறீர்கள் என்றால் சரிதான். நீங்கள் பயணித்த சாலையின் அகலம் எவ்வளவு என்றால் 12 அடி. இரண்டு புறமும் சாலையில் மண் சாலைகள் என்றால் சரிதான். நீங்கள் இருசக்கர வாகனத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கிறீர்கள் என்றால் 200 மீட்டர் இருக்கும். இருசக்கர வாகனம் சாலையின் மத்தியில் வந்தாரா அல்லது இடதுபுற ஓரத்தில் வந்தாரா என்றால் இடதுபுற ஓரத்தில் வந்தார். அவ்வாறு இருக்கும்பொழுது இரண்டு கார்கள் ஒரே நேரத்தில் அந்த பாதையில் செல்ல முடியுமா என்றால் முடியும். இருசக்கர வாகனம் நீங்கள் சொல்லுவதை போன்று சரியாக சென்றிருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனத்தின் கவனக்குறைவு மற்றும் விதிமீறல் காரணம் தான் விபத்து ஏற்படுவதற்கான காரணம் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. எதிரிக்கும் விபத்திற்கும் தொடர்பில்லை எனவும் விபத்து ஏற்படுவதற்கு எதிரி வாகனம்

**காரணமில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் இறந்த நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.07.13 17:38:44 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.

CC.624/2025

13.07.2026

PW – 6, உலகநாதன், த/பெ.சன்னியாசி, வயது– 53

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 04.45 P.M.

விசாரணை முடிக்கப்பட்டநேரம் – 04.53 P.M.

Solemnly affirmed by Selvi.M.K.Anusha,M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 13.07.2026

(குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 43(2)ன் கீழ் சாட்சிக்கு அவரது முதன்மை சாட்சியம் நினைவுக்கூர்வதற்காக படித்து சொல்லப்பட்டது)

குறுக்கு விசாரணை:–

முதல் தகவல் அறிக்கை பெற்று சம்பவ இடத்தை எப்போது பார்வையிட்டீர்கள் என்றால் உதவி ஆய்வாளர் தான் முதல் கட்ட விசாரணையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். சம்பவ இட சாட்சிககளை யார் யாரை விசாரரித்தீர்கள் என்றால் சசி, அன்பழகன், திருமுருகன், சுகந்தி, பாண்டியன், வடிவேலு ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டது. சாட்சிகள் அனைவரும் இறந்த நபரின்

உறவினர் என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இறந்த நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடம் செல்லவில்லை எனவும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இறந்த நபரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத் தரவேண்டி தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2026.07.13 17:38:55 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.